REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 119

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சென்னை : ஐப்பசி 14௳ வியாழன் (30—10—53) ★ ★ ★ வெளியூர் : ஐப்பசி 15௳ வெள்ளி (31—10—53)

# காங்கிரஸின் மதிப்பு தேய்கிறது!

—(:)—

## பொதுத் தேர்தலில் இருந்த ஆதரவை நகரசபைத் தேர்தலில் காண முடியவில்லை!

### வீழ்ச்சி கண்ட காங்கிரஸ் தலைவர்களிடையே அதிர்ச்சி

59 தலைமைப் பதவிகளில் 35 பதவிகளை காங்கிரஸ் இழந்து விட்டது

### உத்திரப் பிரதேசத்திலேயே இந்தக் கோலம் என்றால், மற்ற மாநிலங்களில் சொல்லுவானேன்?

லக்னோ, அக். 29—

உத்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற 59 நகராட்சி மன்றத் தேர்தல்களில், 35 நகராட்சி மன்றங்களைக் காங்கிரஸ் அல்லாத பிற கட்சிகள் கைப்பற்றி உள்ளன.

பிற கட்சிகளிலும், எந்தக் கட்சியிலும் பங்கு கொள்ளாத சுயேச்சையாளர்கள் 19 நகரசபைகளில் செல்வாக்குப் பெற்றிருக்கின்றனர்.

பிரஜா—சோஷலிஸ்ட் கட்சி 8, ஜனசங்கம் 7, இந்துசபை 1 ஆகிய வகையில் நகராட்சி மன்றங்களில் ஆதிக்கம் பெற்றுள்ளன.

சென்ற பொதுத் தேர்தலின்போது சட்டசபைக்கும், பாராளுமன்றத்துக்கும் காங்கிரசுக்கே பெருமிதமாக மக்கள் வாக்களித்திருப்பதற்கு மாறாக, நகராட்சி மன்றத் தேர்தலில் நகரப் பகுதியில் உள்ள வாக்காளர்கள் அதிகப்படியான வாக்குகளினால் காங்கிரசைத் தோற்கடித்து இருப்பது கண்டு காங்கிரஸ் தலைவர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது.

## "கத்தியைப் பள்ளிக்குக் கொண்டுவராதீர்!"

'ஒருவரையும் கத்தியால் குத்தினதைக் காணவில்லை யானாலும், அது நமக்குத் தேவையும் இல்லை!'

### தலைமை ஆசிரியரின் அருள்கனிந்த அறிவுரை

லண்டன், அக். 28—

"இதுவரை, ஒருவரும் குத்தப்பட்டதைக் காணவில்லையானாலும், அந்த விரும்பத்தகாத செயலைக் காண வேண்டவே வேண்டாம்."

"எழுதுகோலைக் கூர்மையாக்குவதற்காக, சில சமயங்களில் 6 அங்குல நீளமுள்ள கத்தியைச் சில மாணவர்கள் கையாளுகிறார்கள்."

மாணவர்களில் சிலர் பள்ளிக்கூடங்களுக்குக் கத்திகளை எடுத்துவரும் வழக்கத்தைக் கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது என்று, மாணவர்களின் பெற்றோர்களுக்குத் தலைமை ஆசிரியர் ஒருவர் உருக்கமாக எழுதியுள்ளார்.

இங்கிலாந்தின் வட நாடியாம் பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் எப். எல். ஆலன் என்பவர், மேற்குறித்தவாறு எடுத்துக் காட்டி, பெற்றோர்களுக்கு, தப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும் என்று கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

## பெயர் விளக்கம்

★

"அவர்கள் (தி. மு. கழகம்) அடிப்படையிலேயே வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள்."

—தி. மு. கழகம் பற்றிக் கேட்ட கேள்விக்கு ஈரோடு பொதுக் கூட்டத்தில் பெரியார்.

—'விடுதலை': 29—10—53.

## "உள்ளங்களை இணைக்கப் பாலம் தேவை"

— (0) —

### போலீஸ் துரத்தலுக்கு ஆளானவர் அதே பணியை மேற்கொள்வது முறையாகுமா?

போதனை மட்டும் போதாது எதிர்ப்பாளர்களின் குறைகளைக் களைய முயல வேண்டும்!

### குடந்தை கருப்புக் கொடி கண்ட கவர்னரின் கண் துடைப்புப் பேச்சு

கும்பகோணம், அக். 27—

ஐயம்பேட்டை குடமுருட்டி ஆற்றின்மீது கட்டப்பெற்ற பாலத்தை இன்று மாலை கவர்னர் திறந்துவைத்தார். திறப்பு விழா முடிந்து அவர் பேசுகையில், குறிப்பிட்டதாவது :—

"இந்தப் பாலம் கட்டப்பட்டது குறித்தும் அதைத் திறந்து வைக்க கவர்னர் வந்திருப்பது குறித்தும் ஏராளமானோர் மகிழ்ச்சியோடிருக்கையில், சில நண்பர்கள் மட்டும் மகிழ்ச்சியில்லாமல் இருக்கின்றனர். அவர்கள், என்னை 'திரும்பிப் போ' என்று கூவுகின்றனர். நான் பாலம் கட்டப்பட்டுள்ள இடத்திற்குத்தான், திரும்பிப் போகிறேன்.

"ஆர்ப்பாட்டம் செய்ய இது தருணமல்ல என்பதை அவர்களுக்கு நான் வருத்தத்துடன் சுட்டிக் காட்டுகிறேன். இன்றைய உலகில் மக்கள் உள்ளங்களை இணைக்க பாலமிடுவது அவசியம். உள்ள பாலங்களை இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நாசம் செய்கின்றனர். வேறுபட்டுக் கிடக்கும் உள்ளங்களை ஒன்று சேர்க்க வேண்டும்."

"35 வருட காலம் போலீசார் என்னைத் துரத்தி வந்தனர்; கைது செய்வதற்காக, என்னை அவர்கள் அப்போது துரத்தினர்; இன்று பாதுகாப்பளிப்பதற்காகத் துரத்துகின்றனர். இன்றுகூட போலீசாரைக் கண்டால் எனக்கு கலக்கம்தான். என் இஷ்டப்படி விட்டிருந்தால், கருப்புக் கொடி காட்டியவர்களை அழைத்து புத்தி கூறியிருப்பேன். அது அவர்களுக்கு நன்மை பயக்கும்.

கிராமங்களையும், நகரங்களையும் இணைக்க கல்லாலும், சிமெண்டாலும் பாலங்கள் கட்டுவதுடன், மக்கள் மனதை இணைக்கும் ஆத்மார்த்த பாலங்களையும் கட்டுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்," என்றார்.

## நெசவாளர் வாழ்வு பெற சென்னை சர்க்காரின் புதிய ஏற்பாடு

### கைத்தறி நூல் விநியோகிக்கத் தனி மில் திறக்கப்படுமென தொழில் மந்திரி அறிவிப்பு

சென்னை, அக். 30—

நேற்று ராஜாஜி மண்டபத்தில், கைத்தறி நெசவாளர் வியாபாரிகள் மாநாடு ஒன்று டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு தலைமையில் நடைபெற்றது. மாநாட்டைத் துவக்கிவைத்து டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் பேசியதாவது :—

"கைத்தறி நெசவுக்கு ஊக்க மளிக்க மத்திய சர்க்கார், மில்துணிகள்மீது விதித்த செஸ்வரி, இன்னும் சென்னை சர்க்காருக்கு வந்துசேரவில்லை. இன்னும் ஓரிரண்டு மாதங்களில், அத்தொகை வந்து சேரலாம். செஸ்வரி மூலம் கிடைக்கும் 85லட்ச ரூபாயில், 2½ லட்ச ரூபாய், ஏற்கனவேயுள்ள கைத்தறிக் கூட்டுறவுக் கழகங்கள் மூலம் விநியோகிக்கப்படும். 7½ லட்சம் ரூபாய் புதிய கழகங்களுக்குக் கொடுக்கப்படும். இதனால் 40,000 நெசவாளர்களின் துயர் துடைக்கப்படும்," என்றார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது :—

"கைத்தறி நெசவாளர்களுக்கு வேண்டிய நூல்களை உற்பத்தி செய்ய ரூ. 10 லட்சம் செலவில் ஒரு தனி மில் துவக்கப்படும். இதற்கான டெப்போக்களும், அலுவலகங்களும் ரங்கூன், சிங்கப்பூர், கொழும்பு, பாக்தாத் ஆகிய இடங்களில் திறக்கப்படும். கைத்தறியாளர்கள், மில் காக்கி போன்ற துணிகளை நெய்தால், இராணுவத்தினரும், போலீஸ் இலாகாவும் வாங்கத் தயாராக உள்ளனர்," என்று கூறினர்.

முடிவில் கைத்தறியாளர்கள் நலன் குறித்து பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## "மதுரை மாவட்ட மக்களை திருப்தி செய்யவே நான் மந்திரியாக்கப்பட்டேன்"

### திருமங்கலத்தார் சொல்கேட்டு தஞ்சை மாவட்டத்தார் சல்லடம் கட்டுகிறார்

### 'நுணலும் தன் வாயால் கெடும்' என்றப் போக்கில் புதிய சிக்கலைக் கிளப்பிவிட்ட 'மேதை!'

திரு. ராஜாராம் நாயுடு அவர்களை ஒரு அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பது மதுரை மாவட்ட மக்களைத் திருப்தி செய்வதற்காகவே, என்று அவர் எடுத்துக் காட்டி இருப்பது சிந்தனையைக் கிளறும் விஷயமாக இருக்கிறது.

அமைச்சர் குழுவில் இடம் கோர, மற்ற மாவட்டங்களுக்கும் உரிமை உண்டு; சிலவற்றிற்கு அதிகமான உரிமையும் இருக்கிறது.

தென்னாட்டின் நெற்களஞ்சியம் என்று மங்காப் புகழ் பெற்று இலங்குவதும், தனது விளைச்சலினால் மற்ற மாவட்டங்களைப் பசியாற்றி வருவதும், மற்றவர்களுக்கு இளைக்காமல் முன்னாள் புகழ்பெற்று விளங்குவதும், அரசியல் நிபுணர், வழக்கறிஞர், நீதிபதிகள், மருத்துவர், பொறியியல் வல்லுனர், போன்ற சிறப்புடை அறிஞர்களை தம் மக்கட்பேறாகக் கொண்டுள்ளதுமான தஞ்சை மாவட்டம் நீண்ட காலமாகவே இந்த செல்வாக்கு பெற்ற அமைச்சர் அவையில்

(8-ம் பக்கம் பார்க்க)

### மாநில தமிழாசிரியர் கழகம்

சென்னை, அக். 30—

மாநில தமிழாசிரியர் கழக அமைப்புக் குழுவினர் சார்பில் அக் 24ம் தேதி மாலை பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் புலவர் மயிலை வெழுத்து தலைமையில் செயற்குழு கூடிற்று. திரு. வி. க நிதிக்கு உதவி அளிக்க வேண்டுமென செயற் குழு கேட்டுக்கொண்டது.

## ஐவர் சிறையில் இன்று 60-வது நாள்


# நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 30-10-1953 வெள்ளி


# பொற்குவை தாரீர்!

'பழியோரிடம், பாவமோரிடம்' என்று, திருவிளையாடல் புராணத்தில் கற்பனைக் கதை ஒன்று இருக்கிறது. ஒரு பார்ப்பனத் தம்பதிகள் காட்டில் ஒரு மரத்தடியில் வந்து தங்கினர். தனது மனைவியைத் தனிமையில் இருக்கவிட்டு பார்ப்பனக் கணவன் 'உஞ்சவிருத்தி'க்கு வெளியேறிச் சென்றான். அவளுக்கு ஆயுள் முடிந்துவிட்டது. உயிரைக் கவர்ந்து செல்ல காலனின் தூதவர்கள் வந்தனர். அவளது உயிரைக் கவர வழியொன்று தேடினர். அவள் தங்கி இருந்ததற்கு நேராக மரத்தின் கிளைகளுக்கிடையே ஒரு அம்பு சிக்கிக் கிடந்தது. மரக்கிளையைப் பற்றி உலுக்கினர் தூதர்கள். சிக்கு நீங்கி, அம்பு தரை நோக்கி விரைந்தது. மலர்ந்து படுத்து உறங்கி இருந்த பார்ப்பனப் பெண்ணின் மார்பில் தைத்தது அம்பின் கூர் இருதயத்தில் பாய்ந்தது. அப்பெண் இறந்தாள். பிச்சையேற்கச் சென்ற பார்ப்பனன் திரும்பி வந்தான். மனைவி, அம்படிபட்டுச் செத்துக்கிடப்பதைக் கண்டான். கோபவெறி கக்கி அழுது அரற்றினான். அத்தருணத்தில், அவ்வழியே வில்லும் அம்புமாக வேட்டை தேடிவந்த வேடுவன் தோன்றினான். அந்த வேடன் கை அம்பால்தான், தன் மனைவி மாண்டிருக்க வேண்டும் என்று பார்ப்பனன் முடிவிற்கு வந்தான். வேடன் கொலைக் குற்றவாளியாக்கப்பட்டான். நிரபராதியான வேடன் தூக்கிலேற்றப்பட்டான். இதுதான், 'பழியோரிடம் பாவமோரிடம்' என்ற கற்பனையின் சாரம்.

கதை, புராணப் புளுகுதான்; கற்பனை மட்டும் கருதத் தக்கதாகும். தூத்துக்குடி தோழர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள சதி வழக்கிற்கும், இந்தக் கற்பனைக் கதைக்கும் தொடர்புண்டா இல்லையா என்பதைக் கண்டு கூறும் பொறுப்பு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப் பட்டாகிவிட்டது. விளக்கி எழுத முடியாமல் சட்டம் குறுக்கிடுகிறது. திருக,

எப்படியோ தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர்கள் மீது, 16 சட்டப் பிரிவுகளின்படி, 96 குற்றங்கள் சுமத்தி வழக்குத் தொடுப்பதில் ஆச்சாரியார் சர்க்கார் வெற்றிபெற்று இருக்கிறது. இந்தப் பட்டியல் நமக்கு அச்சமளிக்கிறது. ஆனால் நமது தோழர்களின் பண்பாடு, அந்த அச்சத்தை உடனடியாக நமது உள்ளத்திலிருந்து துடைத்து எறிந்துவிடுகிறது. புதிய நம்பிக்கை பிறக்கிறது. இத்துறையில் ஆரம்ப வெற்றி ஆச்சாரியார் சர்க்காருக்கானாலும், இறுதி வெற்றி, நமது தி. மு. கழகத்துக்குத்தான் என்ற திடசித்தம் நமக்கு ஏற்படுகிறது.

'சட்டம், ஒரு இருட்டறை; அதில், வக்கீலின் வாதம் ஒரு விளக்கு—ஏழையினால் பிரகாசமான விளக்கைப் பெற முடியாது,' என்ற பேருண்மையை நமது தோழர்கள் அறிந்து இருக்கிறார்கள். சிறந்த வழக்கறிஞர்களை, வழக்காட, தலைமை நிலையம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதன் விவரம் ஏற்கனவே தரப்பட்டு இருக்கிறது.

தூத்துக்குடி தோழர்கள்மீது சர்க்காரால் சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் 96 என்றால், அவைகளை மெய்ப்பிக்க உள்ள [illegible] அந்தக் குற்றங்களைக் கழகத் தோழர்கள் சார்பில் மறுத்துக் கூற, அந்தத் தொகை—ஏன்—அதற்குக் கூடுதலாகவும் சாட்சிகள் தேவைப்படும். ஒவ்வொரு சாட்சிக்கும், ஒவ்வொரு தவணை வருவதற்கும் பயணச் செலவு கொடுத்தாக வேண்டும்.

இந்த வழக்கை விசாரிக்கவும், முடிவைத் துரிதமாக்கவும், இதற்கென்றே தனி நீதிமன்றம் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உடனடியாக வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். நீண்டநாள் பிடிக்காது, கால அளவும் குறுகி இருக்கும்.

நமது தி. மு. கழகத் தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், சே. வி. கே. சாமி, எம். எஸ். சிவசாமி, எஸ். நடராசன், எம். இரத்தினம் முதலிய ஐவரும், கழக முன்னணி வீரர்கள் பட்டியலில் உள்ளவர்கள். மற்ற தோழர்களின் செயல் திறமும் குறைவாகக் கொள்ளத்தக்கதல்ல.

இவர்கள், நமது கழகக் கோட்பாடுகளைப் பட்டிதொட்டிகளில் எல்லாம் பரப்பினவர்கள். இடையறாது, பலன் கருதாது கழகப் பணி புரிந்தவர்கள். அந்தப் பக்கங்களில் நமது தி. மு. கழகக் கொடி சம்பிரமாக விண்ணில் விளையாடிக் கொண்டு இருப்பதற்கு இந்தத் தோழர்களின் அரிய உழைப்பே காரணம் என்பது மிகையாகாது.

கழகம் துவக்கிய நான்கு ஆண்டுகளுக்குள்ளாக, பலம் மிக்கதோர் திராவிடப் பெருங்குடி மக்களின் பொது நிறுவனமாக, நமது தி.மு. கழகம் உருவெடுத்து இருப்பது ஊரறிந்த உண்மை. இந்த உயர்ந்த நிலை நமது கழகத்திற்கு உண்டாவதற்குப் பாடுபட்டவர்களில் பெரும்பாடு பட்டிருப்பவர்கள் தூத்துக்குடி தோழர்கள். பொதுவாக இதை மறப்பது, நன்றிமறப்பதாகும். அதுவும் இந்தத் தருணத்தில் மறந்து கிடப்பது என்பது, மன்னிக்கமுடியாத மாபெரும் குற்றமாகும்.

பெருந்தொகை செலவினால்தான் சிறந்த வழக்கறிஞர்களை வாதாடக் கொள்ள முடியும் என்பது எல்லோருக்கும் புரியக்கூடியதாகும். தூத்துக்குடி வழக்கில், வழக்கறிஞர் செலவு அதிகம்; ஆயிரக்கணக்கில் தேவைப்படுகிறது.

தூத்துக்குடித் தோழர்களே, எதிர் வழக்காடி, நியாயம் பெறட்டும் என்று தலைமை நிலையம் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. அது முறையுமல்ல—விரும்பக் கூடியதுமல்ல.

அது, அலட்சியப் போக்கு. அந்தப் போக்கு, நமது தி. மு. கழகத்தை, இதுவரை, என்றும் அண்டியதும் கிடையாது - தொட்டதும் கிடையாது.

நமது தி. மு. கழகம் ஓர் திராவிடப் பெருங்குடும்பம். தொடக்க முதல், அதன் வரலாறு இப்படித்தான் அமைந்திருக்கிறது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சிலர் அல்லல் படும்பொழுது, மற்ற பலர் கைகட்டி இருப்பதென்பது எக்காலத்து உண்டா? இதுவரையில் நமது தி. மு. கழகக் குடும்பம் வேறு தானே என்று எவர் விஷயத்திலும் இருந்தது கிடையாது.

தூத்துக்குடி வழக்கில், நமது கழகத் தோழர்கள் குற்றவாளிகள் என்று ஏற்பட்டால், அதனால் ஏற்படும் மாசு, பட்டி தொட்டிகளில் உள்ள எல்லாக் கிளைக் கழகங்களின் மீது சுமரும். கிளைக் கழகங்கள் களங்கமடைந்த பிறகு, இவைகளை எல்லாம் திரட்டி உருவாக்கி செயல்படுத்தும் கருவூலமாக இருக்கும் தலைமைக் கழகம் மட்டும் கறை படாமல் எப்படி இருக்க முடியும்?

தூத்துக்குடி சதி வழக்கு, தி. மு. கழக எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடியதாகும். இந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தத்தான் ஆச்சாரியார் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. எனவே, ஆச்சாரியார் சர்க்கார் எண்ணத்தில் மண் விழச் செய்ய வேண்டும்.

தனி வழக்கு மன்றத்தில் தூத்துக்குடி தோழர்களுக்கு எதிராகத் தீர்ப்புக் கிடைத்தால், செஷன்ஸ் வழக்கு மன்றத்திற்கும் நமது கழகம் சென்றாக வேண்டும். அங்கும் இரண்டொருவருக்கு பாதகமான தீர்ப்புக் கிடைத்தால், சென்னை உயர் நீதிமன்றத்திற்குள் நுழைந்தாக வேண்டும்.

[illegible] எதிர்த்தாய் ஆகவேண்டும். ஆச்சாரியார் சர்க்கார் இந்த நெருக்கடியை நம்மீது திணித்திருக்கிறது.

தூத்துக்குடி சதிவழக்கு, ஆச்சாரியார் சர்க்கார் நமது தி. மு. கழகத்தின்மீது போட்டிருக்கும் மரணப் பிடியாகும். எப்படியும் நாம் உதறித்தள்ளி வெற்றிகண்டாக வேண்டும். தூத்துக்குடி தோழர்கள் வீழ்ந்தால் நம் அனைவரையும் அந்த வீழ்ச்சி பாதிக்கும்.

இதுதான் தூத்துக்குடி சதி வழக்கில் உள்ள பயங்கர விளைவு. ஆயிரம் ஆயிரம் தேவைப்படுகிறது எதிர்வழக்காட.

கழகத் தோழர்கள், குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும், வழக்கு வெற்றிக்குத் தம்மால் ஆன உதவிகளைச் செய்வதாக. செல்வர்கள் பெருந் தொகை கொடுக்க வேண்டும்; குறைந்தவர்கள் ரூபாய் கணக்கில் உதவ வேண்டும்; அதிலும் குறைந்தவர் ஒவ்வொரு ரூபாயாவது உடனடியாகக் கொடுத்தாக வேண்டும். மற்றவர் நாலணா, எட்டணா என்ற வகையிலாவது தந்தாக வேண்டும்.

தொடக்கமுதல் இறுதிவெற்றி கிட்டும் வரையில், 20,000 ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

வழக்கின் விவரம் கூறியாகிவிட்டது—தேவையின் அளவு குறித்தாகிவிட்டது—இனி தோழர்களின் நெஞ்சு தான் திறந்தாக வேண்டும்—முன்காந்தான் நீண்டாக வேண்டும்.

நாளை, நாளை என்றும் காலம் தள்ளாதீர்!

இன்றே செய்யுங்கள்! அதுவும் நன்றே செய்யுங்கள்!!

---

# காங்கேயம் பகுதி தோழர்களுக்கு!

அடுத்த திங்கள் முதல் வாரத்தில் நடைபெற இருக்கும் காங்கேயம் தொகுதி சட்டசபை இடைத் தேர்தலில், காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்துப் போட்டியிடும் தோழர் கே. ஜி. பழனிச்சாமி (கவுண்டர்) அவர்களை, ஆதரித்து, வெற்றி பெறும் வகையில் பணி புரிவது என்று தி. மு. கழகத் தலைமை நிலையம் முடிவிற்கு வந்திருக்கிறது.

எனவே, தி. மு. கழகத்தைச் சேர்ந்த சிறந்த சொற்பொழிவாளர்களான செயல் வீரர்கள் அனைவரும் தேர்தல் பிரசாரத்தில் உடனடியாகக் கலந்துகொள்ள வேண்டுகிறோம். அத்தொகுதியில் உள்ள தி. மு. கழகக் கிளைக் கழகங்களும் ஒத்துழைப்பு அளித்து நமது ஆதரவு பெற்ற அபேட்சகருக்கு வெற்றி தேடித் தருமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்.

---

## யாரறிவார்?

"நான் பதவியிலிருந்து விலகி விட்டால் இளைஞர் காங்கிரசிற்கு வேலையே இல்லை. அதைக் கலைத்துவிடலாம்."

—சேலத்தில் ஆச்சாரியார் 25—10—53

## இலவசக் கல்வி விஸ்தரிப்பு திட்டம்

இந்திய சர்க்கார் பண உதவி

சென்னை, அக் 30—

கல்வி விஸ்தரிப்பு திட்டத்திற்காக. மாநில சர்க்கார்களுக்குப் பண உதவி செய்வது குறித்து, இந்திய சர்க்கார் ஆலோசித்து வருவதாகத் தெரிய வருகிறது.

14 வயது வரையில் எல்லாக் குழந்தைகளுக்குமே கட்டாய இலவசக் கல்வி அளிக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் எண்ணத்தையே இப்பண உதவி பற்றி யோசிக்கப்படுகிறது.

சென்னை சர்க்கார், மற்றும் இதர சர்க்கார்களிடம், இவ்விஷயமாகத் திட்டங்களைச் சமர்ப்பிக்கும்படி இந்திய சர்க்கார் கேட்டுள்ளது.

தொழிற் கல்வி, பாடப்புத்தக ஆராய்ச்சி, ஆதார சமூகக் கல்வி இவைகளுக்கான திட்டங்களையும் இந்திய சர்க்கார் வகுத்துள்ளன.

## நமக்கல்ல; அவர்களுக்கு!

புதுடெல்லி, அக். 28—

இந்தியாவில் சோவியத் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள எம். ஏ. மென்ஷிகாவ், பீஹார் முதலிய வெள்ள நிவாரணத்திற்காக 3 லட்சம் ரூபாய் 'செக்' ஒன்றை இந்தியப் பிரதமரிடம் இன்று அளித்தார்.

இந்த நன்கொடை, சோவியத் செஞ்சிலுவை சங்கத்திலிருந்து பிரதமரின் தேசிய நிவாரண நிதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

## சரித்திரம் காணாத பலம்!

அமிர்தசரஸ், அக். 24—

"இந்தியாவின் உணவு நிலை இப்போது திருப்திகரமாக இருக்கிறது. எக்காலத்திலும் இல்லாத பலம் இப்போது இந்தியாவுக்கு இருக்கிறது," என இங்கு பேசிய பிரசாத் குறிப்பிட்டார்.

## சென்னையில் 144 நீளுகிறது

சென்னை, அக். 28—

முன் அனுமதியின்றி பொதுக் கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடத்தக் கூடாதென்று நகர போலீஸ், 1953 ஏப்ரலில் பிறப்பித்த தடை உத்தரவை, டிசம்பர் 31-ந் தேதி வரை நீடித்திருப்பதாக அறிக்கை ஒன்றில் சென்னை நகர் போலீஸ் கமிஷனர் அறிவித்துள்ளார்.

## நகரசபையில் வெற்றிலைப் பாக்கு!

விஜயவாடா, அக் 27—

நகரசபை நடந்துகொண்டிருக்கும்போது வெற்றிலைப் பாக்கு மெல்லலாமா என்பது பற்றி காரசாரமான விவாதம் நடைபெற்றது.

மெல்லக்கூடாதென ஓர் உத்தரவை பிறப்பித்து ஒரு உறுப்பினரை வெளியில் போக உத்தரவிட்டார், நகரசபைத் தலைவர். அவர் மறுத்தார்.

பலர் வற்புறுத்தலுக்கிணங்க நகரசபைத் தலைவர் உத்தரவை வாபஸ் பெற்றார்.

# யூனியன் சர்க்கார் மீது சி. ஆர். சீற்றம்!

## இந்திய சர்க்காரிடம் வாரிசு வரிப் பணம் குவிவதில் ஆச்சாரியார் அதிருப்தி

*அதை இங்கேயே நிறுத்திவிட அவாது யோசனை*

'அசோக் விகார்' விவகாரத்தில் விளக்கம்

சென்னை, அக். 30—

"'அசோக விஹாரு'க்குப் பணம் திரட்ட ஒரே வழியுள்ளது இப்போது வந்திருக்கிற வாரிசுவரிச் சட்டத்தின்கீழ், ஏராளமான பணம்படைத்த பணக்காரர்களிடம், சர்க்கார், வரிபோட்டு, பணம் வசூலிக்கலாம். ஆகையால், நகரசபை, வயதான பணக்காரர்களிடம் சென்று, வாரிசுவரிச் சட்டத்தை எடுத்துக் கூறி, அவர்களது பணம் வாரிசுவரியாக சர்க்காருக்குப் போவதை காட்டிலும், 'அசோகவிஹாரி'ன் அரிய பணிக்கு பயன்படுவதற்கு கொடுத்துதவுமாறு கேட்டு, அவர்களிடமிருந்து பணம் வசூலித்து, 'அசோகவிஹாரி'ன் செலவுகளுக்குப் பணம் திரட்ட வேண்டும்."

*—இவ்வாறு நேற்று மாலை நடைபெற்ற 'அசோகவிஹாரி'ன் ஐந்தாவதாண்டு விழாவின் சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் கூறினார்.*

*தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:—*

*"'அசோகவிஹாரி'ல் ஏற்படும் உற்சாகமெல்லாம், தற்காலிக உற்சாகமேயாகும். எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைத்து நாடு முன்னேறுவதற்கான வழியைச் செய்வதில்தான் உண்மையான உற்சாகமிருக்கிறது. நகரில் வாழும் 300 குடும்பங்களுக்கு 'அசோகவிஹார்' சேவை செய்வதாக அறிக்கையில் கூறப்பட்டது. நம் நாட்டில் முக்கால் வாசி மக்கள் ஏழைகள்; இதில், 300 பேருக்கு மட்டும் 'அசோக விஹார்' பணி புரிந்தால் போதாது. நகரில் வாழும் மூன்று லட்சம் ஏழை மக்களுக்கும் நலன்களைச் செய்து தரவேண்டும், 'அசோக விஹார்'"*

*"ஊரில், ஆயிரம் பிச்சைக்காரர்கள் இருந்தால், ஒரு பிச்சைக்காரருக்குப் பிச்சை போட்டதும், உலக தரித்திரமே தீர்ந்துவிட்டதாக ஒரு திருப்தி ஏற்படுகிறது. அதைப்போல், மூன்று லட்சம் பேர் அயருறும்போது, 300 பேருக்கு மட்டும் வசதிகள் செய்து கொடுப்பதின் மூலம் ஒரு திருப்தி ஏற்படுகிறதா? கடல் நீர் உப்பாக இருந்தாலும், அதில், கருவேப்பிலையையும் பெருங்காயமும் போட்டால் சாம்பாராகி விடாது. அதைப் போலவே, 300 பேருக்கு வசதி செய்து கொடுப்பதால் மட்டும் 3 லட்சம் பேருடைய துயர் தீர்ந்துவிடாது."*

*"மக்களுக்கு சுதந்திரத்தைப் பற்றிப் போதிக்கத் தேவையில்லை. எப்படி சுத்தமாக இருக்க வேண்டுமென்றோ, எப்படி தர்மம் செய்யவேண்டு மென்றோ, மேல் நாடுகளுக்குச் சென்று கற்று வர வேண்டியதில்லை. நம் முன்னோர்கள் நமக்கு எல்லாவற்றையும் நன்றாகக் கற்பித்து வைத்துச் சென்றுள்ளார்கள். சுத்தமாக இருக்க மக்களுக்குத் தெரியும். வசதிக் குறைவுதான் அசுத்தத்திற்குக் காரணம்."*

*"'அசோக விஹாரை' இராணுவத்தினர் விட்டுவிட நினைத்த போது, நகர சபை, தாங்கள் எடுத்துக் கொள்வதாகச் சொல்லி எடுத்துக் கொண்டது. இது எப்படியுள்ளதெனில், சந்தைக்கு விற்பனைக்குச் செல்லும் மாட்டை விற்கவேண்டாமென்று சொல்லி, தாம் எடுத்துக்கொள்வதாக ஒருவன் வாங்கிக் கொண்டதைப் போலாகும். மாட்டை வாங்கிக் கட்டிவிட்டான்; அது ஏராளமான தீனியைச் சாப்பிட ஆரம்பித்தது. அதேபோல், 'அசோக விஹாரை' நகர சபை எடுத்துக் கொண்டது. பின்னால், 'அசோக விஹா'ருக்கு ஏராளமான பணச் செலவு ஆவதைப் பார்த்தனர். இதற்காகச் சர்க்காரிடம் பணம் கேட்பதில் பயனில்லை."*

## 'இலங்கை இந்தியர் துயர் நீங்கிய பாடில்லை'

தோழர் தொண்டமான் சொல்கிறார்

*சென்னை, அக். 30—*

*"இலங்கையிலுள்ள இந்தியர்களின் நிலைமை, இன்னும் மோசமாகத்தான் இருந்துவருகிறது," என்று, இங்கு வந்துள்ள தோழர் தொண்டமான் கூறினார்.*

*"பிரஜா உரிமை மனுக்கள் பயனற்ற காரணங்களால் தள்ளப்படுகின்றன; இது பற்றி, அண்மையில் நடைபெற்ற இலங்கை இந்திய காங்கிரசின் காரியக் கமிட்டியில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப் பட்டது," என்றார்.*

*இலங்கை இந்தியர் நகராது பற்றி ஆராய தற்போதைய இலங்கை புதிய பிரதமருக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று தோழர் தொண்டைமான் சொன்னார்.*

## கழகக் கூட்டங்கள்

★

### சூளேசுவான்பட்டி

1—11—53 ஞாயிறு மாலை

பேசுவோர்:

கோபி. ஜி. என். ராசு

பி. என். இராமானுசம்

★

### வந்தவாசி

1—11—53 ஞாயிறு மாலை

தலைவர்: கே. ஏழுமலை

பேசுவோர்:

டி. வி. நாராயணசாமி

தோழியர் பூங்கோதை

" அருண்மொழி

★

### மதுரை

1—11—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு, சந்தைத் திடலில்

பேசுவோர்,

இரே. இளம்வழுதி

எஸ். எஸ். ராஜேந்திரன்

எஸ். முத்து

## மதுரை மாவட்ட...

*(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)*

அலட்சியப்படுத்தப்பட்டு வருகிறது:

இந்த மாவட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட அதன் பிரதிநிதிகளில் ஒருவரை அமைச்சராக்கக் கோண்டில்லாத காரணத்தால் பல வகையில் பாதகமடைந்து வருகிறது. எனவே, தஞ்சை மாவட்ட மக்களுக்கு இழைத்துவரும் அநீதியைத் துடைக்க அரசியலார் முன் வருவார்களா?

*—இந்தப் பொருள் நிரம்பிய கடிதத்தை தஞ்சை டி. என் காளிதாஸ் அய்யர் அவர்கள், 'மெயில்' 23-10-53 இதழில் வரைந்துள்ளார்.*

# 'யூனியன் ஜாக்' கொடி அகற்றப்படுகிறது!

## அரசனை ஆண்டவன் காப்பாற்றட்டும் என்ற கீதமும் கைவிடப்படுகிறது!

*கொழும்பு, அக். 29—*

*இனிமேல், இலங்கை சர்க்காரின், சர்க்கார் தொடர்புடைய அலுவல்களில், இலங்கை நாட்டுப் பண்ணான 'நமோ நமோ மாதா' எனும் கீதமும், இலங்கைக் கொடி மட்டுமேதான் இடம் பெற வேண்டும் என்று, ஒரு கட்டளையை இலங்கை சர்க்கார் பிறப்பித்து இருக்கிறது.*

*இதுவரை, இலங்கைக் கொடியுடன், பிரிட்டிஷ் கொடியும், நாட்டுப் பண்ணுடன் பிரிட்டிஷ் அரச வாழ்த்துப் பாடலும் சர்க்கார் சம்மந்தப் பட்ட காரியங்களில் கையாளப் பட்டு வந்தன.*

### இலங்கையில் தமிழ்க் கல்வெட்டு

*கொழும்பு, அக். 27—*

*திரிகோண மலைக்கு வடக்கே 5 மைலில், புராதன பௌத்தக் கோயில் ஒன்றின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இங்கு தமிழிலும், சிங்களத்திலுமாக 15 கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடத்திற்கு "ராஜ ராஜ பெரும்பள்ளி" என்ற பெயர் வழங்கியதாக தமிழ் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. இந்தக் கோயில் 11-வது நூற்றுண்டைச் சேர்ந்ததென்று புதை பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள்.*

### அர்ச்சகர் சிறை புகுந்தார்

*சென்னை, அக். 28—*

*சென்னை ஆசாரப்பன் தெருவில் உள்ள உடையார் கோயில் அர்ச்சகராக இருந்த குப்புசாமி பட்டாச்சாரி என்ற அர்ச்சகருக்கு 4-வது மாகாண மாஜிஸ்திரேட் 26-ந் தேதி பன்று 3 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.*

*குப்புசாமி பட்டாச்சாரி, அவர் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்த கோயில் நகைகளை மாங்காடு கிராமத்தைச் சேர்ந்த சவுகாரிடம் விற்றுவிடவே அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு மேற் கூறிய தண்டனை விதிக்கப்பட்டது.*

### இருபது பேர்தானும்!

*சென்னை, அக். 30—*

*சென்னை, சர்க்கார் காரியாலை மாற்றியமைப்பின் விளைவாக 20 பேர்தான் வேலை இழக்க நேரிடுமென்று உத்தியோக வட்டாரத்தினர் மதிப்பிடுகின்றனர். அவர்கள், தற்காலிகமாகசேர்க்கப்பட்டவர்கள்தான் என்று கூறப்படுகிறது. மத்திய சர்க்கார் சர்வீசுகளில் அவர்களுக்கு வேலைதேடித் தரப்படும்.*

*கீழ்த்தர சிப்பந்திகள் (பியூன்கள்—அட்டெண்டர்கள்) 146 பேர்கள் நீக்கப்படுவர். அவர்கள் வேலை தேடிக்கொள்ள வேண்டுமென்றும் அறிவிக்கப்படுகிறது.*

### கல்கத்தா பாகிஸ்தான் அலுவலகத்தில் குண்டு வீச்சு

*கல்கத்தா, அக். 29—*

*கல்கத்தாவிலுள்ள பாகிஸ்தான் டெபுடி கமிஷனர் கே. நகருல்லாவின் அலுவலகக் கட்டடத்தின்மீது இன்று திடீரென்று யாரோ பல குண்டுகளைச் சுட்டு விட்டு ஓடிவிட்டனராம். ஆள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.*

### நகர மன்றங்களில் நியமனங்கள்

**வகுப்புவாரி முறை கூடாதாம்!**

*குடந்தை, அக். 27—*

*மாவட்டக் கழகங்கள், நகர சபைகளின் கீழ் செய்யப்படும் எந்த உத்தியோக நியமனங்களிலும், ஷெட்யூல்டு வகுப்பினர், பின்னணி வகுப்பினர் தவிர, வேறு யாருக்கும் ஸ்தானங்களை ஒதுக்குதல் கூடாதென்பதாக சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.*

*அரசியல் சட்டத்தின் 16-வது ஷரத்துப்படி, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தவறு என்பதாக கருதுவதாலேயே சர்க்கார் இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளனர்.*

*இதன்படி, நகர மன்றங்கள் நேரிடையாக ஒதுக்குவது மொத்தம் 20 ஸ்தானங்கள் என்றால், அதில், 3 ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், 5 பின்னணி வகுப்பினருக்கும் ஒதுக்கிவிட்டு, மீதி 12-ஸ்தானங்களை, எல்லோருக்கும் பொதுவாக, தகுதி — திறமையின் பேரில் அளிக்கப்பட வேண்டும்.*

*இந்த முறை, மாவட்டக் கழகங்கள், முனிசிபல் கவுன்சில்கள் செய்யும் எல்லா நியமனங்களுக்கும் கையாளப்படும்.*

*1939-ம் ஆண்டு, சென்னை மாவட்டக் கழக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விதி ரத்து செய்யப்படும்.*

### கீழ்நாத்தூர் தி. மு. கழகம்

*திருவண்ணாமலை, அக். 30—*

*திருவண்ணாமலைக்கு அருகில் இருக்கும் கீழ்நாத்தூரில் 25—10—53ல்; தி. மு. கழகக் கூட்டம் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தலைமையில், நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் வ. சம்பந்தம் செயலாளராகவும், கு. தங்கராஜன் உதவி செயலாளராகவும், மு ஆறுமுகம் பொருளாளராகவும், ப கோவிந்தன் மாவட்டப் பிரதிநிதியாகவும், மற்றும் மு. பழனி, க பொன்னம்பலம், மு. தங்கராசு, ப. கண்ணன், மு. நடேசன், சே. நடராசன், தேவு ஆகியோர் கமிட்டி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.*

### 'தம்பி'

*சிந்தனையூட்டும் சிறந்த கற்பனைச் சித்திரங்களைத் தீட்டி, இக்காட்டு இளைஞர்களின் இதயங்களில் இடம்பெற்றுள்ள தோழர் தில்லை-வில்லாளன் 'தம்பி' என்னும் அரசியல் வார இதழைத் துவக்கியிருக்கிறார். 1—10—53 முதல் திராவிடத்திலே 'தம்பி' முரசு கொட்டி வருகிறான்.*

*ஆயிரமாயிரம் தம்பிமார்களை, 'தம்பி' தி. மு. கழக முகாமிற்கு இட்டு வருவான் என்ற நம்பிக்கை நமக்குண்டு. வாழ்க தம்பி. வளர்க தம்பி.*

*ஆசிரியர் தில்லை - வில்லாளன் முகவரி, 'தம்பி', சிதம்பரம், தனி இதழ் 0—2—0 அணா.*

★

### "எழுச்சி"

*மாயூரத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தி. மு. கழக இதழான "எழுச்சி", முக்கிய சில மாதங்களாக, நவம்பர் முதல் வாரத்திலிருந்து, சென்னையிலிருந்து வெளிவர இருக்கிறது என தோழர் மா. செங்குட்டுவன் தெரிவிக்கிறார்.*

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# தூத்துக்குடி வாரம்

## தி. மு. கழக கிளைக் கழகத் தோழர்களுக்கு

★

1. நவம்பர் முதல் வாரத்தில், (1-ந் தேதி முதல் 8-ந் தேதிக்குள்) ஒரு நாள், " தூத்துக்குடி நாள் " என்று ஒரு கூட்டம் அவசியம் நடத்த வேண்டும்.
2. அந்தக் கூட்டத்தில், தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, அதில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யும்படி, சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
3. நிறைவேற்றிய தீர்மானத்தை, "கனம், இராசகோபாலாச்சாரியார், முதல் மந்திரி, அரசாங்க மாளிகை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை—9," என்ற முகவரிக்கு உடனடியாகத் தபாலில் அனுப்பி, நகலை, தலைமை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.
4. அன்றைய கூட்டத்திலேயே, தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, தோழர்களை விடுதலை செய்யும்படி சென்னைப் பிரதம மந்திரியை கேட்டுக் கொள்ளும் மகஜா ஒன்று தயாரித்து, அதில், நூற்றுக்கணக்கான கையெழுத்துக்களை வாங்கி, தனியாகப் பிரதம மந்திரி 'முகவரிக்கு' அனுப்பி, கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கையை தலைமை நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி, ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகக் கிளையும் கட்டாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது.

'அறிவகம்,'
சென்னை,
23—10—53.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# ஆந்திர மாணவர்களின் புதிய கல்வித்திட்ட எதிர்ப்பு!

## அனந்தப்பூர் கல்லூரி மாணவர்களில் கணிசமானவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றனர்

அனந்தப்பூர், அக் 28—

"புதிய கல்வித் திட்டமானது, இப்பொழுது உள்ள வர்க்க பாகுபாட்டையும், ஜாதி உயர்வு தாழ்வு வேற்றுமைகளையும் நீடித்து நிலைபெறச் செய்வதற்காகவும், தாழ்த்தப்பட்டுக்கிடக்கும் சமூகங்கள்மீதும், கல்வி அறிவு பெறாதவர்கள்மீதும், தங்களுக்கு இருந்துவரும் ஆதிக்கப்பிடியைக் கெட்டிப்படுத்திக்கொள்வதற்காகவும், பிற்போக்காளர்களாலும், படித்த பட்டதாரிகளாலும் மிகத் தந்திரமாகப் புகுத்தப்பட்டிருக்கும் ஓர் திட்டமாகும்."

இரண்டு தினங்களுக்குமுன், இங்குள்ள கல்லூரியின் பொருளியல், வரலாற்று இயல் மாணவர் குழுவினர், ஒரு போலி பாராளுமன்ற நடவடிக்கையை நடத்தினர். அதற்கு இந்திய பார்லிமெண்டு உறுப்பினரான தோழர் கே.எஸ். இராகவாச்சாரியலு தலைமைவகித்தார். நடவடிக்கையைக் கவனிக்க ஏராளமான பொதுமக்களும் வந்தனர். அந்தப் போலி அமைச்சர் குழுவில், கல்வி அமைச்சராக இருந்த தோழர் கே. சிராமுலு அவர்களை, புதிய கல்வித் திட்டத்தை சட்ட சபைமுன் புகுத்துமாறு தலைவர் ஆணையிட்டார்.

அதை எதிர்த்துப் பேசினார், எதிர்க்கட்சி தலைவராக நடித்த தர்மராஜ் ராவ். அவர் பேச்சின் சாரம்தான் மேலே தரப்பட்டிருப்பது.

அமைச்சர் குழுவைச் சார்ந்தவர்களில் சிலர், திட்டத்துக்கு ஆதரவாகப் பேசினர்; எதிர்த்தும் பலர் பேசினர்.

மசோதா ஓட்டுக்கு விடப்பட்டதில், குறைந்த எண்ணிக்கை வித்தியாசத்தில் நிறைவேறியது.

### நீதி இலாகா பதவி நியமனங்கள்

கவர்னரின் புதிய விதிகள்

சென்னை, அக். 28—

சென்னை மாநில நீதி இலாகா உத்தியோக நியமனங்களுக்கு இப்போதுள்ள விதிகளை ரத்து செய்துவிட்டு, கவர்னர். விசேட விதிகளை இயற்றியுள்ளார்.

இதில் பின்தங்கிய வகுப்பினர், ஷெட்யூல்டு வகுப்பினர் ஆகியோருக்கு மாவட்ட முனிசிப் உத்தியோகங்களுக்கு ஸ்தானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

விதிகளில் இரு பிரிவுகள் அடங்கியுள்ளன. முதலாவது, சபார்டினேட் நீதிபதிகள்; இரண்டாவதாக ஜில்லா முனிசிப்புகள்.

மாநில மாஜிஸ்திரேட்டுகள், முதலாவது, அல்லது இரண்டாவது பிரிவினராகக் கருதப்படுவார்கள்.

உத்தியோக உயர்வின் பேரில் முனிசிப்களிலிருந்து சபார்டினேட் ஜட்ஜுகள் நியமிக்கப்படுவர். கவர்னர் எண்ணினால், அதன்படி தேர்வுகள் நடைபெறும். நியமனத்திற்கு முன், மாநிலசர்க்கார் அளிக்கும்பயிற்சியைப் பெறவேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டியலிலிருந்து, 20 ஸ்தானங்களுக்கு, ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், ஷெட்யூல்டு மலைஜாதி வகுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டதை அனுசரித்து, கவர்னரால் முதல் நியமனங்கள் செய்யப்படும்.

நேரடி நியமனத்திற்கு மனுதார் 32 வயது பெற்றிருக்க வேண்டும். 3 ஆண்டுகள் [illegible] கேட்டராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.

---

கெய்ரோ, அக். 30—

சூயஸ் பற்றி பிரிட்டனுக்கும்—எகிப்துக்கும் மிடையே நடைபெறும். பேச்சு வார்த்தைகள் பிரிட்டிஷ் பிரதிநிதியின் உடல் நலக் குறைவின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# கல்லக்குடி அறப்போர்

★

இன்று

109-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

108-வது நாள்

## இலட்சிய நடிக மன்ற 3ம் ஆண்டுவிழா

### சிறை மீண்ட தோழர் சி. ஆர். பாலசுந்தரம் குழுவினருக்குப் பாராட்டு

சென்னை, அக். 28—

மேற்படி மன்றத்தின் 3-ம் ஆண்டு விழாவும், சிறை மீண்ட தோழர் சி. ஆர். பாலசுந்தரம் குழுவினருக்குப் பாராட்டும் 24—10—53 மாலை நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி தலைமையில் நடைபெற்றது. மன்றச் செயலாளர் மு. வரதராசன் ஆண்டு அறிக்கை படித்த பின், தோழர் வி. என். கோவிந்தராசன் நாடகத்தின் முக்கிய தொண்டுகளைப் பற்றியும், மன்றத்தின் சார்பாக இரண்டு மாதம் சிறை சென்று மீண்ட தோழர்களைப் பாராட்டியும் பேசினார்.

அடுத்து, தோழர் வி முனுசாமி பேசுகையில், அடிக்கடி கூட்டங்கள் நடக்கும் இடங்களுக்கு சர்க்கார் வேண்டுமென்றே அனுமதி கொடுக்க மறுத்து விடுகிறார்கள்; இந்த கூட்டம் 17-10-53ல் நடக்க வேண்டிய கூட்டம்; இன்று, இந்த வட்டத்தில் நடக்கிறது: காங்கிரசார்,மேடையிலே பேச்சுரிமை தந்திருக்கிறோம் என்று கதறுகிறார்கள் என, அரசியலாரின் அடக்குமுறையினைக் கண்டித்தார்.

அடுத்துப் பேசிய தோழர் டி வி. நாராயணசாமி, ஆச்சாரியாரின் அலங்கோல ஆட்சியைப் பற்றியும், புதிய கல்வித் திட்டத்தின் வர்ணாஸ்ரமத்தைப் பற்றியும் குறிப்பிட்டுவிட்டு, அண்ணா அவர்களை அடைத்துவிட்டால் கழகமே நடக்காது என்று சர்க்கார் நினைத்தது; ஆனால், இன்று நடக்கும் நிலைமைகளைப் பார்த்துக் கலங்குகிறது; நாங்கள் சொல்லும் விளக்கங்களை அறிவுக் கண் கொண்டு பார்த்து, ஆட்சியை நல்ல முறையில் மாற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

கடைசியாகப் பேசிய தோழர் எஸ். எஸ். ராஜேந்திரன் பேசுகையில், "முன்பு, நாடகம்—நடிகர்கள் என்றாலே கேவலமாக நினைத்து வந்தார்கள்; இன்று, இலட்சியத்திற்காக நாடகம்; இலட்சியத்திற்காக நடிகர்கள், என்று நிலைமை மாறிய பிறகு, திரை உலகத்திலும், இலட்சிய எழுத்தாளர்கள், இலட்சிய நடிகர்கள் என்ற நிலை வளர்ந்துளது. இந்த இலட்சிய நடிக மன்றம், நாடகத்தில் மட்டும் கவனம் செலுத்தாமல், பொதுத் தொண்டுகளிலும் கவனம் செலுத்தி இழந்த நாட்டைப் பெற பாடுபட வேண்டும்" என கேட்டுக்கொண்டார்.

## தெரிந்து கொள்ளுங்கள்

புதுடில்லி, அக். 23—

1 இந்தியாவில், மின்சாரத் தொழிலில், மொத்தம் 18.31 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது; இதில், அந்நிய நாட்டு மூலதனம் 4.77 கோடி ரூபாய் ஆகும்.

2 இந்தியாவில் உள்ள 'மேலசேன்' ரயில்வே பாலத்தின் நீளம், 10,052 அடி; இது ஆசியாவிலேயே மிகப் பெரியதும், உலகத்தில் ஏழாவது பெரிய பாலமுமாகும்.

3. 1953 ஆகஸ்ட் இறுதியில், மொத்தம் சுமார் 242 லட்சம் மக்கள் தொகை கொண்ட 101 நகரங்களில், சட்டபூர்வமான உணவுப் பங்கீடு அமுலில் இருந்துவந்தது.

4. லண்டனிலுள்ள இந்திய சர்க்கார் ஸ்டோர்ஸ் இலாகா, 1952-53-ல் கொள்முதல் செய்துள்ள சாமான்களின் மொத்த மதிப்பு 193 லட்சம் ரூபாய் ஆகும்.

5. இந்தியாவில் உள்ள டிரங் டெலிபோன் இணைப்புக்களின் மொத்த நீளம் 2,30,047 மைல்களாகும்.

6 1953 54-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், நரை—கடம் சுங்க வருமானத்தின் மூலம் சுமார் 76.91 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

# தானே மேதை! அது அற்றவர் மற்றவர் என்ற அகந்தை!

## தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்!

### பால் பெய்து சமைத்தாலும் உள்ளியின் குணம் மாறுமா?

மேட்டூர், அக். 24—

"நான் புதிய கல்வித் திட்டம் குறித்து சாமர்த்தியமாக நடந்து கொள்ள எண்ணியிருந்தால், நான் வேறு வழியைக் கையாண்டிருப்பேன்; இத்திட்டத்தை, என் நண்பர் வேறு யாரையாவது கொண்டுவரச் சொல்லிவிட்டு, நான் அதை எதிர்த்திருக்கலாம்; அப்படிச் செய்திருந்தால், இப்போது என்னை எதிர்ப்பவர்கள், ஏழைகளுக்கு நலன் பயக்கும் திட்டத்தை நான் எதிர்ப்பதாகச் சொல்லியிருப்பார்கள். எந்த விஷயத்தையும் தெளிவான நேரான வழியில் செய்வது தான் என் வழக்கம்: இவ்வளவு வயதுக்குப் பின் அதை மாற்றிக்கொள்ள முடியாது"

இவ்வாறு மேட்டூர் ஜில்லா போர்டு பள்ளிக் கட்டிடத்தைத் திறந்துவைக்கையில் ஆச்சாரியார் பேசினார்.

ஆச்சாரியார் சென்னையில் ஓர் இடத்தில் கல்வித் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது கூறியதாவது:

"கல்வித் திட்டத்தை நான் கொண்டுவருமுன்பே ஒரு நிபுணர் கமிட்டியின் மூலம் இத்திட்டத்தைக் கொணர்ந்து, அதை நான் எதிர்த்திருந்தால், இப்போது இத்திட்டத்தை எதிர்ப்பவர்கள் முழு மனதுடன் ஆதரித்திருப்பார்கள்."

### விவசாயிகளுக்கு நிலம்

பாரசீக மன்னரே நேரில் அளித்தார்

தெஹ்ரான், அக். 30—

நிலமில்லாத 1,600 பாரசீக விவசாயிகளுக்கு, நிலங்களை பாரசீக மன்னரே நேரில் வினியோகித்தார். 25 தவணைகளில் பணம் செலுத்தி, இந்நிலத்தை அவர்கள் சொந்தமாக்கிக் கொள்ளலாம். விவசாயிகளின் கஷ்டங்களையும், குறைகளையும் அவர்கள் வாய்மொழி மூலமே கேட்டுத் தெரிந்துகொண்டார், மன்னர்!

### திருந்திய திருமணம்

சென்னை, அக். 30—

25—10—53ல், வண்ணையில், பெருநிலக்கிழார் தோழர் அ. குட்டியப்ப (நாடார்) மகன் தோழர் கு. நாகராசனுக்கும், தோழர் சி. ப. பொன்னுசாமி (நாடார்) அவர்கள் மகளும், தி. மு. கழகத் தோழியருமாகிய பொ. செகசோதிமணிக்கும், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி தலைமையில் திருந்திய திருமணம் நடைபெற்றது. திருமணத்தைப் பாராட்டி தோழர்கள் ப ஜீவானந்தம், எம் எல்.ஏ. பி. ராமசாமி, ப.ரா. முத்துசாமி, எம். எஸ். முத்துகிருஷ்ணன் ஆகியோர் பேசினர். மணமக்களைப் பாராட்டி பல கழகங்கள், மன்றங்கள் சார்பில் வாழ்த்துப் பத்திரங்களும், மலர்மாலைகளும் வழங்கப்பட்டன. திருமணத்திற்கு வர இயலாமை குறித்தும், மணமக்களை வாழ்த்தியும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரமும், மந்திரிகள் டாக்டர் யூ. கிருஷ்ண ராவ், எம். பக்தவத்சலம், கே. ராஜாராம்நாயுடு ஆகியோரும், மதுரை நாடார் மகாஜன சங்கம், மற்றும் பல முக்கியஸ்தர்களிடமிருந்தும் வாழ்த்துத் தந்திகள் வந்தன.

### திருவண்ணாமலையில் சிறப்புத் திருமணம்

திருவண்ணாமலை, அக். 27—

தி. மு. கழக முக்கியஸ்தர்களில் ஒருவரான திருவண்ணாமலை தோழர் ப. உ. சண்முகம் அவர்களின் தம்பி தோழர் ப. உ. கண்ணனுக்கும், சேலம் மீனாட்சி பிலிம்ஸ் உரிமையாளரான எஸ். கோவிந்தசாமி பிள்ளை அவர்களின் மகள் தோழியர் ராதாபாய்க்கும் 26—10—53 திங்கள் காலை, தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., தலைமையில் திருமணம் நடைபெற்றது. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, மற்றும் நண்பர்கள், பிரமுகர்கள் அனைவரும் வந்திருந்து விழாவினைச் சிறப்பித்தனர்.

மாலை 6 மணிக்கு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால் 'கிந்தனார்' கலா நிகழ்ச்சியும், வில்லுப் பாட்டும் நடைபெற்றன.

## அடையாறு பிரம்ம ஞான சபை வெறும் பார்ப்பன சபைதான்!

— (:) —

### அதன் ஆரம்ப வரலாற்றின் அனுபவம் தரும் பாடம் அதுதான்

கவர்னரின் சஞ்சலமும் சமரச போதனையையும் 'அவர்கள்' செவி புகாது!

தஞ்சை, அக். 25—

'இந்தியாவில், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர்களின் ஆட்சி மறைந்தது போலவே. மேற்கு நாடுகளில், மன்னர்கள் சர்வாதிகாரிகளின் ஆட்சி மறைந்துவிட்டது. எல்லோரும்இனி சூத்திர ராஜ்யங்கள் ஏற்படுவதை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்.

விவேகிகளான பிரம்ம ஞானிகள் திடீரென்று ஏமாற்றம் அடைய வேண்டாம். வேதியர்கள், அரசர்கள், முதலாளிகள் ஆகியவர்களை ஒழித்தால் போதாதென்பதும், ரஷியர்கள் கூறுகின்ற 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' ஏற்பட வேண்டுமென்பதே இன்று நிலவும் கருத்து.

பாட்டாளிகளின் ஆட்சி என்பது சூத்ர ராஜ்யம்தான். வேறு எதாகவும் அது இருப்பதற்கில்லை.

பிராமணராக இருப்பதில் பிழையில்லை. திராவிட கழகத்தினரின் எண்ணம் எப்படி யிருப்பினும், பிரம்ம ஞான சபையினருக்கு ஜாதி வகுப்பு வித்தியாசமில்லை. ஆனால், ஏழை—பணக்காரன் என்ற வேற்றுமை, பிரம்ம ஞானசபையிலும் இருக்கிறது. தோழமையை இலட்சியமாகக் கொண்டுள்ள நமக்குள், இந்த வேறுபாடு இருக்கக் கூடாது என்று, பிரம்ம ஞான சபைத் தலைவரிடம் கூறப்போகிறேன்,"

—என இங்கு 'பிரம்ம ஞானசபையின் வைர விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், சென்னை கவர்னர் பிரகாசா குறிப்பிட்டார்.

## கைத்தறி துணி வாங்குவீர்!

"வள்ளுவர் காலந்தொட்டு வளமுடன் வளர்ச்சியடைந்த கைத்தறி நெசவுத் தொழிலிலே, இன்று நாடு முழுவதும் சுமார் இரண்டு கோடி பேர் ஈடுபட்டிருக்கின்றனர். இயந்திரப் போட்டியின் காரணமாக இன்று பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள், பிச்சை எடுத்துப் பிழைக்கும் நிலைக்கு வந்துவிட்டனர் நாணயமும் — நம்பிக்கையும் வைத்து கைத்தறி தொழிலிலே ஈடுபட்டிருப்போரைக் காக்க வேண்டிய பொறுப்பு பொது மக்களாகிய உங்களிடத்திலே இருக்கிறது. நெசவுத் தொழில் மீண்டும் வளம்பெற — நெசவாளர்கள் வாழ்வு மிளிர—பொது மக்கள் கைத்தறி துணிகளையே வாங்கி அணிய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறோம்," என்று சேலம், தேவாங்கபுரம் கைத்தறி முன்னேற்ற சங்கத்தார் கேட்டுக் கொள்கின்றனர்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குறிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை, எம்.ஏ.